கைத்தறி சம்பந்தமாக நான் அப்பொழுது விளக்கமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஆனால், இப்பொழுது கேள்வி கேட்டிருப்பதனால், சுருக்கமாகப் பதில் சொல்ல விரும்புகிறேன். இந்த ராஜ்ய சர்க்காருடைய அபிப்பிராயம் இதுதான். குறிப்பிட்ட, சிறந்த மில்களினால் நெய்யப்படாத ரகங்கள், வகைகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் கைத்தறியில் நெய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும் என்பது இந்த ராஜ்ய சர்க்காரினுடைய அபிப்பிராயம். பவர் லூமிலோ, மில்களிலோ நெய்ய வேண்டாத வேஷ்டிகள், சேலைகள் போன்ற சாதாரண ரகங்கள் இருக்குமானால், அவற்றை நெய்ய இருக்கின்ற சங்கங்களைக் கொஞ்சங்கொஞ்சமாக ஸ்பெஷலைஸ்டு வெரைய்டீஸ் செய்யக் கூடிய சங்கங்களாக மாற்றியமைக்க வேண்டும். இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய எண்ணிக்கை குறையவேண்டும். இதில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கெல்லாம் மில்களிலே வேலை கொடுக்க வேண்டும். புதிதாக வைக்கின்ற 10, 12 கூட்டுறவு மில்கள் எல்லாவற்றிலும் கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் முதல் இடம் கொடுக்க வேண்டும். இப்படியெல்லாம் கொள்கை வைத்திருக்கிறோம்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** தலைவர் அவர்களே, இப்பொழுது கோயமுத்தூரிலுள்ள டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸில் உற்பத்தி செய்கிற 32 கதிர் யூனிட் பரீட்சார்த்தமாக இருக்கிறது. அந்த யூனிட்டைப் பவர் லூமோடு இணைத்து குடும்ப யூனிட்டாக ஏற்படுத்தும் யோசனை சர்க்காருக்கு உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்காக நன்றி. 32 கதிர் யூனிட் வெற்றிகரமாக வேலை செய்யவில்லை. அதைக் கைவிடக் கூடாது என்று பல முயற்சிகள் செய்தோம். அதற்காக ஓரளவு பணமும் செலவழித்திருக்கிறோம். பிற்காலத்தில் அதை 'விரயம் செய்தார்கள்' என்றுகூட எங்கள் மீது குற்றச்சாட்டு சொல்வார்கள். சிறு சர்க்கரை ஆலைகள், சிறு சிமெண்டுத் தொழிற்சாலைகள், 32 கதிர்கள் கொண்ட சிறு மில்கள் இவையெல்லாம் எவ்வளவு அதிகமாக நம்முடைய நாட்டில் வைக்க முடியுமோ அவ்வளவு வைக்க முயற்சி செய்ய வேண்டும் என்பது எங்களுடைய கொள்கை. அதை எப்படியாவது நல்ல முறையில் நடத்துவதற்கான முயற்சிகள் செய்தோம். ஆனால், இன்றைக்கு அந்தக் கதிர்கள் சரியாக வேலை செய்யவில்லை. அதை மூடி விடவேண்டும் என்ற மிக வருந்தத்தக்க முடிவுக்கு வந்திருக்கிறோம்.

### *State Transport buses (Inter-States)*

* 214 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. Kalyanasundaram): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of proposed Inter-State routes to be operated by Madras State Transport Department now under negotiation with the Government of Mysore; and

11th March 1964]

(*b*) when a final decision would be taken in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Mysore and a decision will be taken after their reply is reecived.

**திரு. மா. இராசாங்கம் :** மைசூர் மாநில சர்க்காரோடு நமது மாநில சர்க்கார் போக்குவரத்துத் துறை பேச்சுவார்த்தை நடத்துவதைப் போல், கேரள மாநில சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தினர்களே, அது எந்த நிலையில் உள்ளது ? அந்தப் பேச்சுவார்த்தை முடிந்தால் சர்க்கார் பஸ்கள் பெரியகுளம் தாலுக்கா வழியாக மதுரைக்கு வர வழி செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முடிவு ஒன்றும் ஏற்பட வில்லை. பேச்சுவார்த்தை நடத்தின மைசூரிலும் சரி, பேச்சு வார்த்தை நடத்தாத கேரளாவிலும் சரி, முடிவு ஏற்படவில்லை.

* 215 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the new Inter-State bus routes to be run by the Madras State Transport to the Kerala State; and

(*b*) the present stage of negotiations with the Kerala Government?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Kerala; and a decision will be taken after their reply is received and considered.

* 216 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to open a new bus route by the State Transport Department from Madurai to Kottayam (via) Kambam, Kumuli, etc.; and

(*b*) if so, the present stage of the proposal?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) The matter is under correspondence with the State Transport Board, Trivandrum.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, மைசூர் அரசாங்கத் தோடு பேச்சு வார்த்தை நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. மைசூர் லிமிட் 20 மைல்தான் இருக்கிறது. அதற்கு பர்மிட் கொடுப்பது நமக்கு லாபமாக இல்லை. ஏறக்குறைய பணம் பூராவாக மைசூர் அரசாங்கத்திற்குப் போகிறது. ஆகவே, நம் முடைய லிமிட் வரையில் அரசாங்க பஸ் விடக்கூடிய நடவடிக்கை யில் அரசாங்கம் ஈடுபடுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தக் கொள்கை அவ்வளவு சரி என்று நான் ஒத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது பெங்களூருக்குப் பஸ் விட்டால் நிறைய பிரயாணிகள் போவார்கள்.